**Starting time 11.42 A.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 81/2008**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr.III Bench Clerk of this court, on 04.03.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சங்கர் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களிலும் நான் சங்கர் என்று தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆரிமுத்து என்ற பெயர் தான் உள்ளது என்றால், சரிதான். சங்கர் என்ற எனக்கும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள ஆரிமுத்து என்ற நபருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், எனக்கு சங்கர் மற்றும் ஆரிமுத்து என்ற இரு பெயர் உள்ளது. அவ்வாறு எனக்கு இரு பெயர்கள் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

2. தாவா மின் இணைப்பு எப்போது வாங்கப்பட்டது என்றால், எனது தாத்தா ஆரிமுத்து அவர் பெயரில் வாங்கியதாகும். 1996-ஆம் ஆண்டு தாவா மின் இணைப்பை நான் என் பெயரில் மாற்றிக்கொண்டேன். தாவா மின் இணைப்பு எண் 2 ஆனது கடந்த 20.01.1962 அன்று எனது தாத்தா குழந்தைவேல் படையாட்சி மகன் ஆரிமுத்து பெயரில் வாங்கப்பட்டது என்றால், சரிதான்.

3. எனது தாத்தா ஆரிமுத்து படையாட்சிக்கு, மன்னாதி படையாட்சி, பூமாலை படையாட்சி, துரைசாமி படையாட்சி என்ற மூன்று மகன்கள் என்றால், சரிதான். மேற்படி மூன்று சகோதரர்களும் பாகப்பிரித்துக் கொண்டபோது, மின் இணைப்பு 2-ல் துரைசாமி படையாட்சிக்கு பாகம் எதுவும் செல்லவில்லை என்றால், சரிதான். மன்னாதி படையாட்சிக்கு பாகமாக வந்த நிலம், கிணறு, தாவா மின் இணைப்பு பாகம் உள்ளிட்டவைகளை வாதி கணேசன் கிரயம் பெற்றுவிட்டார் என்றால், சரிதான். அதனடிப்படையில் தாவா மின் இணைப்பில் பூமாலை படையாட்சிக்கு பாதி பாகமும், வாதிக்கு பாதி பாகமும் உரிமை உள்ளது என்றால், சரிதான்.

4. 1996-ஆம் ஆண்டிலிருந்து இதுநாள்வரை தாவா மின் இணைப்பு என் பெயரில் உள்ளது என்பதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், பி.வா.சா.ஆ.1 ஆவணம் தான் என் பெயரில் தாவா மின் இணைப்பு உள்ளதற்கான ஆவணமாகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தாவா மின் இணைப்பில் யார் யாருக்கு உரிமை உள்ளது என்று சொல்கிறேன் என்றால், எனக்கும், எனது சகோதரர்கள் அழகப்பன், ரத்தினம் ஆகியோருக்கும் உரிமை உள்ளது.

5. தாவா மின் இணைப்பை என் பெயரில் எப்போது மின் வாரியத்தில் பெயர் மாற்றம் செய்துக்கொண்டேன் என்றால், 1996-ஆம் ஆண்டே பெயர் மாற்றம் செய்துக் கொண்டேன். எனது சகோதரர்கள் இருவர் பெயர் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளதா என்றால், இல்லை. 1996-ஆம் ஆண்டு தாவா மின் இணைப்பை என் பெயரில் மாற்றித் தர மின் வாரியத்தில் கொடுத்த மனுவின் நகலையோ அல்லது மின்சாரம் வாரியம் பிறப்பித்த பெயர் மாற்ற உத்தரவையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. 1996-ஆம் ஆண்டு தாவா மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய வேண்டி நானோ, எனது சகோதரர்களோ மனு எதுவும் கொடுக்கவில்லை என்றும், பெயர் மாற்றல் உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால், சரியல்ல.

6. எனது பதிலுரை, எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் எனது சகோதரர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் எதிலாவது 1996-ஆம் ஆண்டே என் பெயரில்

தாவா மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லி உள்ளேனா என்றால், இல்லை.

7. பி.வா.சா.ஆ.1 ஆவணம் 21.12.2022-ல் கணினியில் பதிவு இறக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். தமிழ்நாடு மின்சாரம் வாரியம், தற்போது நடைமுறைப்படுத்தி வரும் மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும் என்ற திட்டத்தின் கீழ், தாவா மின் இணைப்பு ஒரு ஆரிமுத்து பெயரில் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டதை வைத்து, தாவா மின் இணைப்பு எனக்கு மட்டுமே சொந்தம் என்று பொய்யாக உரிமை கூறுகிறேன் என்றால், சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்குமே தாவா மின் இணைப்பு உரிமையாளராக என் பெயரோ, 1, 2 பிரதிவாதிகள் பெயரோ, வாதி கணேசன் பெயரோ இடம் பெறவில்லை என்றால், சரியல்ல. எனவே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனக்கு மட்டும் தாவா மின் இணைப்பு தனிப்பட்ட உரிமை இல்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அது வாதி கணேசனை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

9. இவ்வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தெரியப்படுத்தினேனா என்றால், தெரிவித்தேன். அவ்வாறு தெரிவித்தற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நிலுவையில் உள்ள இவ்வழக்கு சம்மந்தமாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் நான் எந்த உரிமை கேட்க இயலாது என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.12 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**